மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கிறவர் மருத்துவக் கல்லூரியிலுள்ள கண் சிகிச்சைப் பிரிவு பேராசிரியர். அவருக்கு உதவியாக துணை, உதவி பேராசிரியர்கள், ரீடர்கள் டி.ஓ. பெற்றவர் களோ இருக்கிருர்கள். இவர்களுக்கு உதவியாக அசிஸ்டென்ட் சர்ஜன்ஸ். அவர்களுக்கு உதவியாக இப்படிப்பட்ட முகாம்களில் பணியாற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்கள். அவர்களுக்கு உதவியாக அந்த அந்தப் பகுதியிலுள்ள கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்கள், இன்னும் அலுவலர்கள் இடம் பெறுகிருர்கள். ஒத்துழைப்பு நல்குவதற்கு ஸ்கவுட்ஸ் இடம் பெறுகிருர்கள். இவ்வளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. முகாம்கள் என்கிறபோது கொஞ்சம் வசதிக் குறைவாகத்தான் இருக்கும். சமூக நலன் என்கிற அளவுக்கு இந்தக் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டுதான் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

திருக்காட்டுப்பள்ளி மருத்துவமனை

* 646 வினு.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்குப் விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள அரசு மருத்துவ மனையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : அந்த மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவு டாக்டரை ஏற்படுத்த வேண்டும், எக்ஸ்ரே கருவி அமைக்கப்படவேண்டும் என்று மாவட்ட அதிகாரி பரிந்துரை செய்திருக்கிருரா ? ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாவட்ட அதிகாரி அப்படி ஒன்றும் பரிந்துரை செய்திருப்பதாகக் குறிப்பு இல்லை. குழந்தைப்பிரிவு என்று தனியாக அங்கே ஏற்படுத்த வசதி இல்லை. ஆனல் குழந்தை மருத்துவத்தில் பயிற்சி பெற்ற டாக்டர் எங்கே இருக்கிருரோ அங்கே தனியாக அதற்கும்

1974 மார்ச் 28]

சிகிச்சை கிடைக்க வாய்ப்பு இருக்கிறதே தவிர தனித்தனி பகுதியாக ஏற்படுத்துவது இயலாத காரியம். எக்ஸ்ரே யூனிட் அமைப்பதைப் பொறுத்து 24 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவ மனைகளில் படிப்படியாக கொண்டுவரப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : இந்த மருத்துவமனை நெடுங்காலமாக இருந்து வருவது—படுக்கைகள் 26—இடவசதி போதாது. எனவே குறைந்தபட்சம் இடத்தை விரிவுபடுத்தவும், இந்த எக்ஸ்ரே கருவியை அமைக்கவாவது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதைத்தான் நான் தெரிவித்தேன். 24 படுக்கைகளுக்கு மேற்பட்ட தாலுக்கா மருத்துவ மனையில் இடவசதியை ஏற்படுத்த வேண்டும், பின்னர் ஒவ்வொன்றுக்காக எக்ஸ்ரே கருவிக்கு ஆர்டர் செய்து, அதை அமைக்க கட்டிடம் கட்டி, முறையாக படிப்படியாக அது அமைக்கப்பட இவை பரிசீலிக்கப்படும்.

மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம்

*** 647 வினா.—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேட்டுப்பாளையத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அடையாள நன்கொடைத் தொகையாக ரூபாய் 10,000 கொடுத்து இருக்கிறார்கள். நிலம் வழங்குவதில் 3.16 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஐந்து ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று விதி இருப்பதால், முழு அளவு நிலமும் கிடைத்த பின்னர், கட்டிடம் கட்டுவது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்தைக் கட்ட மொத்த மதிப்பு எவ்வளவு? அரசாங்கம் ஏதாவது உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குடும்ப நல திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு லட்சத்து பத்தாயிரம், ஒரு லட்சத்து இருபதாயிரம் ஆகிறது. ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு மருந்தகம், குடியிருப்